செ.வெ.எண்: 21 நாள்: 12.02.2018

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (12.02.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து விலையில்லா வீட்டுமனைப் பட்டா கோரி 75 மனுக்களும், பட்டா மாறுதல் கோரி 31 மனுக்களும், குடும்ப அட்டை தொடர்பாக 6 மனுக்களும், காவல்துறை நடவடிக்கை கோரி 9 மனுக்களும், வேலைவாய்ப்பு கோரி 12 மனுக்களும், வங்கி தொடர்பாக 6 மனுக்களும், பசுமைவீடு, சாலைவசதி, குடிநீர்வசதி ஆகியவைகள் கோரி 26 மனுக்களும், முதியோர் உதவித்தொகை கோரி 14 மனுக்களும், ஆக்கிரமிப்பு அகற்றுதல் கோரி 16 மனுக்களும், மாற்றுத்திறனாளிகள் தொடர்புடைய கோரிக்கைகள் 10 மனுக்களும், இதர கோரிக்கைகள் தொடர்பாக 57 மனுக்களும் என மொத்தம் 262 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கினார்.

மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகைக்கான ஆணைகளையும் வழங்கினார்.

பின்னர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 1 நபருக்கு ரூ.4650 மதிப்பீட்டில் ஒரு சலவைப்பெட்டியும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 6 நபர்களுக்கு ரூ.22,200 மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரங்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**